பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

02 03 2025 | 6 30 | செய்தி ஆசிரியர்
ஞாயிற்றுக்கிழமை | மாலை | **J.K. / S.K.**

வணக்கம் – மாநிலச் செய்திகள் – வாசிப்பவர் – சுமித்ரா ரத்னம்

## தலைப்புச் செய்திகள்

1. இந்தியா மிக விரைவில் 4வது பெரிய பொருளாதார நாடாக உருவெடுக்கும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு. ஜக்தீப் தங்கர் கூறியுள்ளார்.
2. கச்சத்தீவு தொடர்பாக 1974ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தமே தமிழக மீனவர்களின் பிரச்சினைக்கு காரணம் என்று மாநில ஆளுநர் திரு. ஆர்.என். ரவி தெரிவித்துள்ளார்.
3. தமிழகத்தில் பொதுத்தேர்வுகளை மாணவர்கள் மன அமைதியுடனும், தன்னம்பிக்கையுடனும் எழுத வேண்டும் என்று முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் கேட்டுக்கொண்டுள்ளார்.
4. மக்களவைத் தொகுதி மறுசீரமைப்பு தொடர்பாக முதலமைச்சர் தவறான தகவல்களைத் தெரிவிப்பதாக பிஜேபி மாநில தலைவர் திரு. அண்ணாமலை குற்றம் சாட்டியுள்ளார்.
5. சாம்பியன் கோப்பை கிரிக்கெட் போட்டியில் நியூசிலாந்து வெற்றி பெற --- ரன் என்ற இலக்கினை இந்தியா நிர்ணயித்துள்ளது.

*--- இனி விரிவான செய்திகள் ---*

02 03 25 | 6 30 | ஜக்தீப் தங்கர் – கேரளா

இந்தியா வெகு விரைவில் 4வது பெரிய பொருளாதார நாடாக உருவெடுக்கும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு. ஜக்தீப் தங்கர் கூறியுள்ளார்.

திருவனந்தபுரத்தில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், தற்போது இந்தியா 5வது பெரிய பொருளாதார நாடாக உள்ளதாகக் கூறினார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதில் இளையோர் முக்கியப் பங்கு வகிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

கார். — ஹா ஏர்நெட் - 5

02 03 25 6 30 ஆளுநர் - மீனவர்-1

கச்சத்தீவு தொடர்பாக 1974ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் காரணமாக தமிழக மீனவர்கள் தொடர்ந்து பாதிக்கப்பட்டு வருவதாக மாநில ஆளுநர் திரு. ஆர்.என். ரவி கூறியுள்ளார்.

இலங்கை சிறையில் உள்ள தமிழக மீனவர்களை மீட்கக் கோரி ராமேஸ்வரத்தில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மீனவர்களை இன்று சந்தித்துப் பேசிய பின்னர், சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

கச்சத்தீவை ஒட்டிய பகுதிகளில் நமது மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமையை பறித்ததன் மூலம் மத்தியிலும், தமிழகத்திலும் அப்போது ஆட்சியில் இருந்த அரசுகள் மீனவர்களுக்கு பெரும் துரோகம் இழைத்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

அதற்கு காரணமான அரசுதான் தற்போது மாநிலத்தில் ஆளும் கட்சியாக உள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அன்றிலிருந்து இன்றுவரை தமிழக மீனவர்கள் தொடர்ந்து இன்னல்களை சந்தித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

02 03 25 6 30 ஆளுநர் - மீனவர்-2

இப்பிரச்சினையை மாநில அரசு அரசியலாக்காமல், மத்திய அரசோடு இணைந்து செயல்பட்டு நிரந்தரத் தீர்வு காண உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் திரு. ஆர்.என். ரவி கேட்டுக்கொண்டுள்ளார்.

கார். — ஹா கார்த்திகேயன் - 16

02 03 25 6 30 முதலமைச்சர் - வாழ்த்து

தமிழகத்தில் பொதுத்தேர்வுகளை மாணவர்கள் மன அமைதியுடனும், தன்னம்பிக்கையுடனும் எழுத வேண்டும் என்று முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் கேட்டுக்கொண்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வுகள் நாளை தொடங்க உள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேபோல் 11ஆம் வகுப்பு பொதுத்தேர்வுகள் 5ஆம் தேதி தொடங்க உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

11 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளை தலா 8 லட்சத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் எழுத உள்ளதாகவும் முதலமைச்சர் கூறியுள்ளார்.

பதற்றமின்றி உற்சாகத்துடன் தேர்வுகளை எதிர்கொள்ள வேண்டும் என்றும், உயர்கல்வியின் வளர்ச்சிக்காக தமிழக அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாகவும் திரு. மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

02 03 25 6 30 அண்ணாமலை — ராமேஸ்வரம்

மக்களவைத் தொகுதி மறுசீரமைப்பு தொடர்பாக முதலமைச்சர் தவறான தகவல்களைத் தெரிவிப்பதாக பிஜேபி மாநில தலைவர் திரு. அண்ணாமலை குற்றம் சாட்டியுள்ளார்.

ராமநாதபுரத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மக்களவைத் தொகுதி சீரமைப்பு பணிகள் தொடர்பாக மத்திய அரசு எதுவும் தெரிவிக்காத நிலையில் முதலமைச்சர் எதன் அடிப்படையில் இதுகுறித்து கருத்து தெரிவிக்கிறார் என்று வினவினார்.

தொகுதி மறுசீரமைப்பின்போது தமிழகத்திற்கான எண்ணிக்கை குறையாது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடியும், உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷாவும் உறுதியளித்துள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளில் இருந்து மக்களின் கவனத்தை திசைதிருப்பும் நோக்கில் முதலமைச்சர் இப்பிரச்சினையை எடுத்துள்ளதாகவும் திரு. அண்ணாமலை குறை கூறினார்.

02 03 25 6 30 ராமதாசு — அறிக்கை

தமிழகத்தில் பெண் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் கடந்த ஆண்டில் 52 சதவீதம் அதிகரித்துள்ளதாக பாமக நிறுவனர் மருத்துவர் ச. ராமதாசு குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கயில், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிராக குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு கடுமையான தண்டனையை விரைவாக பெற்றுத் தருவதன் மூலமே குற்றங்களை தடுக்க முடியும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு பெண்களும், குழந்தைகளும் அச்சமின்றி நடமாடும் சூழலை தமிழக அரசு ஏற்படுத்த வேண்டும் என்றும் திரு. ராமதாசு கேட்டுக்கொண்டுள்ளார்.

கார். — ஹா செ.கு — 9

02 03 25 6 30 சீமான் - கேள்வி

மும்மொழிக்கொள்கையை எதிர்ப்பதாக திமுக எத்தனை காலம்தான் ஏமாற்றுவார்கள் என்று நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் திரு. சீமான் கேள்வி எழுப்பியுள்ளார்.

தூத்துக்குடி விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தேசிய கல்விக் கொள்கை தொடர்பாக காங்கிரஸ் தனது நிலைப்பாட்டை தெரிவிக்க வேண்டும் என்றும் கூறினார்.

திமுக நிர்வாகிகள் உயர் அதிகாரிகளை அச்சுறுத்தும் வகையில் பேசுவது ஏற்புடையதல்ல என்றும் திரு. சீமான் கூறியுள்ளார்.

கார். — ஹா லட்சுமணன் - 7

02 03 25 6 30 பியூஷ் கோயல் - செ.நு

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தில் இந்தியா முன்னணியில் திகழ்வதாக மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், கடந்த ஆண்டில் மட்டும் நம் நாட்டில் செயற்கை நுண்ணறிவு தொடர்பான 300 கோடி கைப்பேசி செயலிகள் பதிவிறக்கம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

இந்த எண்ணிக்கை அமெரிக்கா மற்றும் சீனாவைவிட அதிகமாகும் என்றும் அமைச்சர் கூறினார்.

கார். — ஹா ஏர்நெட் - 6

02 03 25 6 30 சேலம் - கோடைவிழா

ஏற்காட்டில் கோடை விழாவுக்கான முன்னேற்பாட்டுப் பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கோடை விழாவை ஒட்டி 15 ஆயிரம் தொட்டிகளில் 45 வகையான மலர்கள் நடவு செய்யப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - விஜயகுமார் - 64 நொடிகள்)

கார். — ஹா விஜயகுமார் - 19

02 03 25 6 30 வானிலை

தென் மற்றும் வட தமிழகத்தின் ஒருசில பகுதிகளில் அடுத்த 24 மணி நேரத்தில் மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் இதனைத் தெரிவித்த அவர், அதிகபட்ச வெப்பநிலை அடுத்த 4 நாட்களுக்கு படிப்படியாக அதிகரிக்கக் கூடும் என்றும் தெரிவித்தார்.

(வாய்ஸ் பைட் - செந்தாமரைக்கண்ணன் - 40 நொடிகள்)

கார். — ஹா டெஸ்க் - 15

02 03 25 6 30 மாவட்டச் செய்திகள் - 1

*<u>மாவட்டச் செய்திகள்</u>*

திருவாரூர் மாவட்டம் நீலக்குடியில் அமைக்கப்பட்டு வரும் புதிய பாலத்திற்கான கட்டுமானப் பணிகளை மாநில அமைச்சர் திரு. எ.வ. வேலு இன்று ஆய்வு செய்தார்.

-விஜயகுமார்

திருச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாநில அமைச்சர்கள் திரு. கே.என். நேரு, திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆகியோர் பங்கேற்று மாற்றுத்திறனாளிகளுக்கான நலத்திட்ட உதவிகளை வழங்கினர்.

-கதிரவன்

நாமக்கல் மாவட்டம் ராசிபுரத்தில் உள்ள ஸ்ரீஅங்காள பரமேஸ்வரி அம்மன் திருக்கோவிலில் மயானகொள்ளை நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

-கண்ணன்

தென்காசி மாவட்டம் குற்றால அருவிகளில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கு காரணமாக சுற்றுலாப் பயணிகள் குளிப்பதற்கு இரண்டாவது நாளாக இன்றும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

-செந்தில்

02 03 25 6 30 மாவட்டச் செய்திகள் - 2

தருமபுரி மாவட்டத்தில் உள்ள அரசு சட்டக் கல்லூரியில் நடைபெற்ற மாநில அளவிலான மாதிரி நீதிமன்றப் போட்டியில் மதுரை சட்டக் கல்லூரி வெற்றி பெற்றது.

-தண்டபாணி

மதுரை அருள்மிகு கூடல் அழகர் பெருமாள் கோவிலில் மாசிமக தெப்பத் திருவிழா கொடியேற்றத்துடன் தொடங்கியது.

-ரகுராஜா

கார். — ஹா - 14

02 03 25 6 30 விளையாட்டுச் செய்திகள்-1

*விளையாட்டுச் செய்திகள்*

சாம்பியன் கோப்பை கிரிக்கெட் போட்டியில் நியூசிலாந்து வெற்றி பெற --- ரன் என்ற இலக்கினை இந்தியா நிர்ணயித்துள்ளது.

துபாயில் நடைபெற்று வரும் இப்போட்டியில் டாஸ் வென்ற நியூசிலாந்து முதலில் பந்துவீச தீர்மானித்தது.

இதையடுத்து பேட் செய்த இந்தியா, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் --- விக்கெட் இழப்புக்கு --- ரன் எடுத்துள்ளது.

---------------

அமெரிக்காவில் நடைபெற்ற சர்வதேச தடகள சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Madhvendra Shekhawat** தங்கப் பதக்கம் வென்றார்.

**Arizona**-வில் நடைபற்ற இப்போட்டியின் 60 மீட்டர் தடை ஓட்டத்தில் அவர் இப்பதக்கத்தைக் கைப்பற்றினார்.

---------------

**Prague** செஸ் போட்டியின் நான்காவது சுற்று முடிவில் இந்தியாவின் பிரக்ஞானந்தா மற்றும் அரவிந்த் சிதம்பரம் முதலிடத்தில் உள்ளனர்.

செக் குடியரசில் நடைபெற்று வரும் இப்போட்டியின் 4வது சுற்றில் பிரக்ஞானந்தா, ஜெர்மனியின் **Vincent Keymer**-ஐ வென்றார்.

அரவிந்த் சிதம்பரம் மற்றும் அமெரிக்காவின் **Sam Shankland** இடையேயான ஆட்டம் டிராவில் முடிவடைந்தது.

4வது சுற்று முடிவில் பிரக்ஞானந்தா மற்றும் அரவிந்த் சிதம்பரம் தலா 3 புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

--------------

02 03 25 6 30 விளையாட்டுச் செய்திகள்-2

**Gurugram** ஓபன் டென்னிஸ் போட்டியின் முதலாவது தகுதி சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் **Shruti Ahlawat** வெற்றி பெற்றார்.

-------------

**Billie Jean King** கோப்பைக்கான டென்னிஸ் போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

**Vishal Uppal** தலைமையிலான இந்த அணியில் அங்கிதா ரெய்னா உட்பட 8 பேர் இடம்பெற்றுள்ளனர்.

ஆசியா ஓஷியானா குரூப்-1 சுற்றுக்கான இப்போட்டி புனேயில் ஏப்ரல் மாதம் 7ஆம் தேதி தொடங்குகிறது.

கார். — ஹா ஏர்நெட் - 18